வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.1199/ஆ5/2019 நாள் 24.07.2019

---

பொருள் : பள்ளிக் கல்வி –அயான் பவுண்டேசன் – வேலூர் மாவட்டத்தில் 12ஆம் வகுப்பு அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்க்கு இலவச வாழ்வியல் திறன் பயிற்சி வகுப்புகள் நடத்துவது – அனுமதி அளித்தல் – சார்பாக.

பார்வை : சென்னை, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.032947 / எம் /இ1 / 2019 நாள் 15.07.2019

---

பார்வையில் காணும் கடிதத்தில் சென்னை, அயான் பவுன்டேஷன் நிறுவனத்தின் மூலம் வேலூர் மாவட்டத்தில் அரசு பள்ளிகளில் பயிலும் +2 மாணவர்களுக்கு வாழ்வியல் திறன் பயிற்சி வகுப்புகள் நடத்துவது தொடர்பாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2018–19ஆம் கல்வியாண்டில் வேலூர் மாவட்டத்தில் பொது தேர்வில் 70 சதவிகிதத்திற்கு குறைவாக தேர்ச்சி அளித்த பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு தேர்ச்சி சதவிகிதத்தை அதிகரிப்பதற்காக மாணவ / மாணவியர்களுக்கு

- கல்வி சார்ந்த இலக்கு நிர்ணயம் (Goal Setting),
- நினைவு திறனை வளர்ப்பதற்கான வழிமுறைகள் (Memory Skills) மற்றும்
- தேர்வுகளை நம்பிக்கையுடன் எதிர்கொள்வது எப்படி என்ற தலைப்புகளில்

இலவசமாக பயிற்சி வகுப்புகள் நடத்திட மேற்படி அயான் பவுண்டேசன் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்படுகிறது. தொடர்புடைய நிர்வாகம் இப்பொருள் சார்ந்து தலைமை ஆசிரியரை அணுகும் போது, பள்ளியின் அன்றாட கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் பாதிக்காத வண்ணம் மாணவர்கள் கலந்துக் கொள்ள அனுமதிக்கவும் மற்றும் பாட ஆசிரியர்கள் உடன் இருக்கவும் அறிவுறுத்துமாறு பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

24.7.19

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

24/7

பெறுநர்
தலைமை ஆசிரியர்கள்
அரசு மேனிலைப்பள்ளிகள், வேலூர் மாவட்டம்.

நகல்
திட்ட மேலாளர்
அயான் பவுண்டேசன் , சென்னை 600 032

நகல்
சென்னை, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.